**ஜா-எல பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 21 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஜா-எல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முத்திரை வருமானம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்ட போதிலும், அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 69,181,083 வீதம் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையின் அடிப்படையில் கணக்குகள் வைக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 உப அலுவலகங்களின் மருந்தகங்களில் ரூபா 94,825 பெறுமதியான மருந்து இருப்புக்கள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் இறுதி இருப்புக்கள் கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுப்பசளை தளத்திற்கு கட்டுப்பாட்டு இயந்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,265,000 தொகை செலுத்த வேண்டிய போதிலும், கடன்கொடுத்தோராக ரூபா 4,875,000 தொகை கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பொறுப்புக்களின் சரியான பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,648,498 தெகையான கலி அகற்றும் கட்டணம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிக்கவில்லை. | வருமானம் மூலங்களை சரியாக இனங்கண்டு ஆண்டின் வருமானத்தில் சீராக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | சபைக்கு சொந்தமற்ற கடைகளுக்காக அறவிட வேண்டிய ரூபா 686,137 தொகை ஏனைய வருமான நிலுவையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து உருவாகின்ற வருமானங்கள் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலுவை வாடகைக் கணக்கில் ரூபா 686,137 தொகை சபைக்குச் சொந்தமற்ற கடைக்காக இருந்ததை அறியத்தருகின்றோம். |
| (உ) | பௌதீக இருப்பு மீதி கணக்குளில் சீராக்கப்படாமல் ரூபா 53,975,723 தொகையான இருப்பு பேரேட்டு மீதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பௌதீக இருப்புக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | 2019 யூலை 01 ஆம் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்த ரூபா 402,500 தொகையான நீர்ப் பம்பி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 05 கணக்கு விடயங்களின் மீதிக்கும், உபயோகப் பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 390,684,503 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொடர்ச்சியாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 6,927,135 தொகையான 08 கணக்கு மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 40,641,900 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் மீதிக்கான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காலப் பகுப்பாய்வின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.3.6 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற தீர்த்து வைக்கப்படாத தொங்கல் கணக்கின் மீதி ரூபா 236,425 ஆகும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 371(2) | 762,700 | 2019 திசெம்பர் 18 ஆம் திகதி உடற்பயிற்சி போட்டிகளுக்காக பெறப்பட்ட ரூபா 762,700 தொகையான முற்பணத் தொகை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முற்பணங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் விரைவாக தீர்த்து வைக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ii) | நிதிப் பிரமாணம் 571 | 135,709,827 | 10 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 135,709,827 தொகையான வைப்பு மீதியை இனங்கண்டு ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்பு மீதிகள் இனங்காணப்பட்டு ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | நிதிப் பிரமாணம் 880 | - | பிணைப் பணம் பெறவேண்டியிருந்த 08 உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வைப்புப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிணைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2018 யூலை 19 ஆந் திகதிய 2018/e-Local Government-01 ஆம் | - | இணையதளம் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் | சுற்றறிக்கையின் பிரகாரம் பிரஜைகளுக்கு வசதிகளை | முறையாகத் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| இலக்க மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை | கொடுப்பனவு செய்வதற்கும் பிரஜைகளுக்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 137,137,461 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 183,525,635 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 82,519 | 55,044 | 54,742 | 21,896 | 45,660 | 51,061 | 50,137 | 25,481 |
| (ii) | வாடகை | 17,434 | 11,137 | 6,993 | 8,782 | 16,702 | 14,422 | 11,397 | 10,968 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,010 | 2,305 | 2,305 | - | 1,755 | 2,067 | 2,067 | 93 |
| (iv) | ஏனைய வருமானம் | 202,244 | 164,458 | 164,458 | 914 | 129,561 | 250,065 | 229,860 | 889 |
| | | 305,207 | 232,944 | 228,498 | 31,592 | 193,678 | 317,615 | 293,461 | 37,431 |

#### 2.2.2 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ராகம வாராந்த சந்தை 2019 ஆம் ஆண்டிற்காக கேள்விதாரர் ஒருவர் முன் வராமையினால் அரசாங்கத்தின் மதிப்பீடான ரூபா 3,000,000 தொகையினை விட குறைந்த பெறுமதியான ரூபா 2,199,429 தொகையில் உடன்படிக்கை | பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன் நிலுவை | வாராந்த சந்தை எல்லை தீர்மானிக்கப்படும் வரை சபை அங்கீகாரத்துடன் 2018 ஆம் ஆண்டின் வாடகையாளருக்கே வழங்கப்பட்டிருந்ததுடன் |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திடப்படாமல் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகையாளரால் சபைக்கு மாதாந்த வாடகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வாடகை 1,281,125 தொகையாக இருந்ததுடன் மாதாந்த வாடகை செலுத்தாமை தொடர்பாக வாடகையாளருக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) ராகம மற்றும் கந்தான பொதுச் சந்தையின் இறைச்சிக் கடைகள் முறையே 03 மற்றும் 02 என்பன 2019 ஆம் ஆண்டிற்காக கேள்வி நடைமுறைகளுக்கு புறம்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டிற்காக அதன் ரூபா 8,473,590 தொகையான நிலுவை வாடகைப் பணம் அறவிடப்படாதிருக்கும் போது சபை தீர்மானத்தின் அடிப்படையில் அவர்களுக்கே வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2019 ஆம் ஆண்டிற்கான மாதாந்த வாடகையான ரூபா 29,294,407 தொகை அறவிடப்படாமை தொடர்பாக எவ்வித நடவடிக்கைளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை நடைமுறைகளின் பிரகாரம் வாடகைக்கு வழங்குவதற்கும் நிலுவை வாடகை பணத்தை அறவிடவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக இறைச்சிக் கடை கேள்வி கோரப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் நிலுவையை அறவிடுவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**2.2.3 ஏனைய வருமானம்**

**2.2.3.1 முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பஹா, கம்பொல மற்றும் நீர்கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்து 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்காக இனங்காணப்பட்ட ரூபா 268,333,636 தொகையான முத்திரைக் கட்டணம் 2020 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டுள்ள முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய அலுவலகங்களில் இருந்து அறவிட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்திற்காக சில பட்டோலைகள் மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் சில ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்ற நிலையில் உள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### 3.1.1 வருடாந்த செயலாற்றல் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த செயலாற்றல் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்தல், வீதிப் பதிவேட்டை தயாரித்தல், விண்ணப்பங்களின் பிரச்சினைகள் தொடர்பாக 05 நாட்களுக்குள் உரிய நபர்களுக்கு அறிவித்தல் மற்றும் ஒட்டுமொத்த பதவியணியினருக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடல் போன்ற விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயலாற்றல் திட்டத்தின் பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரிசெய்யப்பட்டு எதிர்காலத்தில் முறையாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |

### 3.2 முகாமத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 20 தவணைகளில் செலுத்தி முடிக்கும் அடிப்படையில் ரூபா 6,280,000 தொகையான மைக்ரோ கெப் வாகனம் ஒன்று பெறப்பட்டிருந்ததுடன் அதனை கொள்வனவு செய்த திகதி முதல் பல்வேறு பழுதுகளுக்கு உட்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட 10 வருடங்களுக்காக வாகனத்தின் பெறுமதியில் 45 சதவீதம் அதாவது ரூபா 2,854,594 தொகை பழுதுபார்த்தலுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் ஓட்டக்குறிப்பின் பிரகாரம் 02 வருடங்களும் 04 மாதங்களுமான காலங்கள் மாத்திரமே ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்யும் போது பொருளாதார நலன்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனத்தை விற்பனை செய்து புதிய வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்படாமையினால் வாகனங்களின் பழுதுகள் மற்றும் அதிகரித்த பராமரிப்பு செலவினங்களின் கீழ் பயன்படுத்த வேண்டியுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறன்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டு ஏலத்தில் நிறுவனமொன்றினால் காணியொன்று கூறிடப்பட்டு விற்பனை செய்யும் போது அதன் அங்கீகரித்தல் நிபந்தனையின் பிரகாரம் பொது வசதிக்காக சபைக்கு கிடைக்க வேண்டிய 40 பேர்ச் அளவிலான காணி உரித்துறுதி மூலம் சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய காணி உரித்தை உறுதிப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணிகளின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதுடன், சட்ட ரீதியான ஆவணங்கள் சமர்ப்பித்தல் காரணமாக ஆதன வரி இலக்கமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ஆ) | ஸ்டாட்டன் எஸ்டேட் காணி கூறிடப்பட்டு விற்பனை செய்யும் போது 10 ஏக்கர் நில அளவொன்று பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டு 1986 இல் பிரதேச சபை ஸ்தாபிக்கும் போது அந்த பொது காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக அது வெளித்தரப்பினரால் கைப்பற்றப்பட்டிருந்தது. இது வரையிலும் தனியார் நிறுவனமொன்றினால் உரிமை கோரப்படுகின்ற இந்த காணியில் 69 பேர்ச் பிரதேச சபைக்கு கையேற்பதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், அந்த காணி அளவு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு உரித்தாக வேண்டிய காணிகளின் உரித்தை உறுதிப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 1963 ஆம் ஆண்டின் 759/63 ஆம் இலக்க நில வரைபடத்தில் 10 ஏக்கர் அளவிலான நிலப்பகுதி சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், கையளிக்கப்படாத 67.05 பேர்ச் பகுதியொன்றை வழங்குவதற்கு தனியார் நிறுவனம் இணங்கியிருந்ததை அறியத்தருகின்றோம். |
| (இ) | வீதிப் பராமரிப்பிற்காக 2018 சனவரி முதல் 2019 யூலை மாதம் வரை மதிப்பீடு இன்றி ரூபா 35,681,094 தொகையான பொருட்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்படாமல் பொருட்களை விநியோகிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தற்போது செயற்திட்டத்திற்காக மதிப்பீடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பொருள் மெய்மெய்யாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பொருள் மெய்மெய்யாய்வின் பிரகாரம் கண்டறிய முடியாத ஆதனங்களின் எண்ணிக்கை 38, புகையிரத நிலைய வீதி பொது குளிக்கும் கிணறு பௌதீக ரீதியில் காணப்படாமை மற்றும் அதில் வீடொன்று இருக்கின்றமை மற்றும் பட்டுவத்த உப அலுவலகத்திற்குரிய ஹிடவக கஹவத்த மற்றும் கொடபரகஹவத்த இல் 42.45 பேர்ச் காணி என்பவற்றை கண்டறிய முடியாதிருந்ததாக அறிக்கையிடப்பட்ட போதும் இது தொடர்பாக சபை இது வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான ஆதனங்களின் உரித்து மற்றும் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சொத்துக்களின் குறைவு தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். |